

திருவண்ணாமலை வேடியப்பன் கோயில் தெருவில் உள்ள வேடியப்பன் குளத்தை, தூய்மை அருணை அமைப்பின் மூலம் சீரமைக்கும் பணியினை, முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் தொடங்கி வைத்தார். உடன் சி.என்.அண்ணாதுரை.எம்.பி., இரா.ஸ்ரீதரன், ப.கார்த்திவேல்மாறன், பிரியா விஜயரங்கன், பா.அரிகிருஷ்ணன், இல.குணசேகரன் உட்பட பலர் உள்ளனர்.



தேர்தல் வாக்குறுதிப்படி தவெக அரசு பயிர்க்கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும் எனக் கோரி அந்தியூர் வட்டாட்சியர் அலுவலகம் முன்பு விவசாயிகள் பெருந்திரளாக ஆர்ப்பாட்டம் செய்தனர்.

## திருவண்ணாமலை

# தூய்மை அருணை மூலம் வேடியப்பன் குளம் சீரமைக்கப்படும்!

### முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு குளத்தை பார்வையிட்டு ஆய்வில் தகவல்!

திருவண்ணாமலை, ஜூன் 22 -

திருவண்ணாமலை தூய்மை அருணை அமைப்பின் மூலம், வேடியப்பன் குளம் சீரமைக்கப்படும் என்று, வாரந்தோறும் நடைபெறும் தூய்மை அருணை பணிகளை முன்னாள் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தபோது செய்தியாளர்களிடம் கூறினார். ரூ.92இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட உடல் ஒப்பனை அகத்தை திறந்து வைத்தார். மழைக்காலத்தை முன்னிட்டு கால்வாய்களை பராமரித்தலை தீவிரப்படுத்த ஆலோசனை வழங்கினார்.

திருவண்ணாமலையில் தொண்டு செய்வோம், துணை நிற்போம் என்ற முழக்கத்தோடு கடந்த 7 ஆண்டுகளாக முன்னாள் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்களை அமைப்பாளராகக் கொண்டு, தூய்மை அருணை திட்டம் செயல்பட்டு வருகிறது. தூய்மை அருணை திட்டத்திற்கு 4 மேற்பார்வையாளர்களும், 39 வார்டுக்கு 39 ஒருங்கிணைப்பாளர்களும், மாட வீதி தூய்மைப் பணிக்கு 7 ஒருங்கிணைப்பாளர்களும் ஒவ்வொரு வார்டுக்கும் 25 தூய்மைக் காவலர்கள் என ஆயிரக் கணக்காணோர் மரம் நடுதல், பராமரித்தல், கால்வாய் மற்றும் தூர்வாருதல் என செயல்பட்டு வருகின்றனர்.

இதனைத் தொடர்ந்து, தூய்மை அருணை அமைப்பும், அருணை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையும் இணைந்து, கர்ப்பிணி தாய்மார்களுக்கு வளைகாப்பு நிகழ்ச்சி மாதந்தோறும் நடத்துவதென தீர்மானிக்கப்பட்டு, முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு ஜூலை 16 அன்று தொடங்கி வைத்தார்கள். இது மாதந்தோறும் நடைபெற்று வருகிறது.

21.06.2026 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 7.00மணிக்கு, திருவண்ணாமலை மாநகரில் நடைபெறும் தூய்மைப் பணிகள், நடப்பட்ட மரக்கன்றுகளை பராமரிக்கும் பணி ஆகியவற்றை முன்னாள் பொதுப்பணித் துறை அமைச்சரும், தூய்மை அருணையின் அமைப்பாளருமான எ.வ.வேலு அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

காலை 7.00மணிக்கு வார்டு எண்21 அஜிஸ் காலனிப் பகுதிகளில் மண்மேடுகள், கால்வாய் அடைப்பு, மரக்கன்றுகள் பராமரிப்பதை பார்வையிட்டு, முன்னாள் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் ஆலோசனைகளை வழங்கினார்.

காலை 7.30மணிக்கு, வார்டு எண்.19 வேட்டவலம் ரோடு இரயில் பாதை அருகே உள்ள ஓடையை சீரமைப்பது குறித்து ஆய்வு செய்தார்.

காலை 7.45மணிக்கு, வார்டு எண்.10, வேடியப்பன் கோயில் தெருவில் உள்ள புதர்மண்டி, பராமரிப்பின்றி சீர்கெட்டு இருக்கும் வேடியப்பன் குளத்தை பார்வையிட்டு ஆய்வு செய்தார். பின்னர் செய்தியாளர்களிடம், முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு பேசும்போது... இந்த வேடியப்பன் குளம் தூய்மை அருணை அமைப்பின் சார்பில் சீரமைக்கப்படும் என்று கூறினார்.

பின்னர் காலை 8.15 மணிக்கு, வார்டு எண்.4 பெரியார் சிலை பின்புறம் உள்ள மசூதி அருகே நடைபெறும் தூய்மைப் பணிகளை பார்வையிட்டு, மரம் பராமரித்தல் குறித்து ஆலோசனைகள் வழங்கினார்.

காலை 8.30மணிக்கு, வார்டு எண்.2, அம்பேத்கர் தெரு அருகில் உள்ள அறிவொளிப் பூங்காவில் நடைபெறும் தூய்மைப் பணியினை பார்வையிட்டும், அங்கு விளையாட வந்த மாணவர்கள் முன்னாள் அமைச்சர் எ.வ.வேலுவிடம் விளையாட்டு உபகரணங்கள் கோரி மனு அளித்தனர். அவர்களுக்கு உடனடியாக விளையாட்டு உபகரணங்கள் வழங்கிட மேற்பார்வையாளர்களிடம் கூறினார்.

காலை 8.45மணிக்கு, வார்டு எண்.1, பச்சையம்மன் கோயில் தெரு அருகில் உள்ள கருமாரியம்மன் கோயில் அருகில் நடைபெறும் வரும் தூய்மை பணி மற்றும் கால்வாய் தூர்வாரும் பணியினை பார்யிட்டு ஆய்வு செய்தார்.

காலை 9.00மணிக்கு, மலைவலப் பாதையில், தூய்மை அருணை அமைப்பால் பராமரிக்கப்படும் ரூ.92 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய உடல் ஒப்பனையகத்தை, ஆன்மீகப் பெருமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.

ஒவ்வொரு வார்டிலும் ஆய்வு செய்த முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு அங்கு தூய்மை பணியில் ஈடுபடும் மாணவர்கள் மற்றும் பெண்களிடம் நலம் விசாரித்து, அவர்களை ஊக்கப்படுத்தினார்.

தூய்மைப் பணியில் தூய்மை அருணையின் மேற்பார்வையாளர்கள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, இரா.ஸ்ரீதரன், ப.கார்த்திவேல்மாறன், ப்ரியா ப.விஜயரங்கன், இல.குண சேகரன், ஒருங்கிணைப்பாளர்கள் அ.கோவிந்தன், செ.எழில்மாறன், ஏ.ஏ.ஆறுமுகம், ம.வினோத்குமார், எஸ்.கே.டி.வீரா, வழக்கறிஞர்கள் ம.செந்தில், கிருஷ்ணமூர்த்தி, பா.அரிகிருஷ்ணன், வழக்கறிஞர் ந.சீனுவாசன், இரா.அருண், மெட்ராஸ்கே.சுப்பிரமணி, காலேஜ் கு.ரவி, கே.காளிதாஸ், குட்டி க.புகழேந்தி, சி.சண்முகம், பி.ஆர்.நாகராஜ், கு.குமார், மண்டி.பிரகாஷ், மு.கருணாமூர்த்தி, இரா.ராஜாமணி, அ.திவாகர், அ.பழனி, கே.பிரகாஷ், பி.ஜி.முருகன், கோபி.சங்கர், சென்னை.சுரேஷ், முபாரக், லயன்.ஷெரீப். கா.ஏழுமலை, எஸ்.ஜாகீர், இரா.ஜோதி, கு.தியாகு, மூ.காமேஷ், ஹக்கிம்சேட், சி.கே.சசிக்குமார், கோல்டு. எஸ்.பிரபு மற்றும் மாட வீதி ஒருங்கிணைப்பாளர்கள் இல.குணசேகரன், சினம்.பெருமாள், ஆர்.கே.பி.பாஸ்கர், ஜீவ ரேகா விஜயராஜ், அருணை. வெங்கட் உட்பட ஆயிரக் கணக்கான தூய்மைக் காவலர்களும் கலந்து கொண்டனர்.

## ‘நீட்’ தேர்வுக்கு கண்காணிப்பு அதிகாரி நியமிப்பதா?

# பா.ஜ.க.வின் ‘பி’ டீமாக செயல்படுகிறது த.வெ.க. அரசு!

### ‘நீட்’ தேர்வால் சேலத்தில் தற்கொலை செய்து கொண்ட மாணவிக்கு அஞ்சலி செலுத்தி ஜெ.வீரமணி பேட்டி!

சேலம், ஜூன் 22-

நீட் தேர்வினால் தமிழகத்தில் மாணவ - மாணவியர்கள் தற்கொலை செய்து கொண்டு வரும் நிலையில் த.வெ.க. அரசு நீட் தேர்வு கண்காணிப்பு அதிகாரி நியமித்திருப்பது கண்டிக்கத்தக்கது என்றும் பா.ஜ.க.வின் பி டீமாக த.வெ.க. அரசு செயல்படுவதை காட்டுகிறது என்று ‘நீட்’ தேர்வால் சேலத்தில் தற்கொலை செய்து கொண்ட மாணவியின் குடும்பத்திற்கு ஆறுதல் தெரிவித்தபின் கழக மாணவர் அணி செயலாளர் வீரமணி குற்றச்சாட்டினார்.

நீட் தேர்வு அச்சத்தினால் சேலம் மாவட்டம் வெள்ளாளபுரம் பகுதியைச் சேர்ந்த கோபிகா என்ற மாணவி தற்கொலை செய்து கொண்டு உயிரிழந்த சம்பவம் தமிழகத்தில் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

இந்த நிலையில் உயிரிழந்த மாணவியின் இல்லத்திற்கு சேலம் மாவட்ட திமுக செயலாளர்கள் முன்னாள் அமைச்சர் ஆர். ராஜேந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். செல்வகணபதி, மாநிலங்களவை உறுப்பினர் எஸ். ஆர். சிவலிங்கம், கழக மாணவரணி செயலாளர் வீரமணி ஆகியோர் தலைமையில் திமுக நிர்வாகிகள், மாணவரணி நிர்வாகிகள் என நூற்றுக்கும் மேற்பட்டோர் நேரில் சென்று உயிர் இழந்த மாணவியின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தி அவரது பெற்றோருக்கு ஆறுதல் தெரிவித்து தி.மு.க. சார்பில் ஒரு லட்ச ரூபாய் நிதியுதவி அளித்தனர்.



முன்னதாக மாணவிக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் வெள்ளாளபுரம் பேருந்து நிறுத்தம் பகுதியில் இருந்து அமைதி ஊர்வலம் சென்றனர்.

தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த கழக மாணவரணிச் செயலாளர் ஜெ.வீரமணி, எந்த நோக்கத்திற்காக நீட் தேர்வு கொண்டுவரப்பட்டதாக பா.ஜ.க. அரசு கூறியதோ அதற்கு நேர் மாறாக தகுதி இல்லாதவர்கள் மருத்துவம் படிக்க வழிவகை செய்யும் வகையில் நீட் தேர்வு பல்வேறு குளறுபடிகளை முறைகேடுகளை ஏற்படுத்தி உள்ளதாகவும், இதனை ரத்து செய்திட வேண்டும் என்று தி.மு.க. அரசு சட்டமன்றத்தில் தீர்மானம் கொண்டு வந்த பின்னரும் ஒன்றிய பா.ஜ.க. அரசு அதனை செயல்படுத்தவில்லை என்று குற்றம் சாட்டிய அவர், தமிழகத்தில் நீட் தேர்வால் பல உயிர்கள் பலியாகி வரும் நிலையில் த.வெ.க. அரசு நீட் தேர்வை கண்டிக்காமல் நீட் தேர்வை கண்காணிக்க அதிகாரி நியமித்திருப்பது கண்டிக்கத்தக்கது என்றும் அதிகாரிகளை நியமித்ததன் மூலமாக பாஜகவிற்கு ஆதரவு அளிக்கும் வகையிலும் பா.ஜ.க.வின் B டீமாக த.வெ.க. அரசு செயல்படுகிறது என்று குற்றம் சாட்டினார். மேலும் தமிழகத்தில் மாணவர்களின் நலனின் அக்கறை செலுத்தாத ஆட்சியாக இந்த ஆட்சியை கண்டித்து திமுக மாணவரணி மற்றும் பல்வேறு மாணவர் அமைப்பினர் சார்பில் ஆர்ப்பாட்டம் நடத்திட உள்ளதாகவும் கழக மாணவர் அணிச் செயலாளர் ஜெ.வீரமணி தெரிவித்தார்.

மாணவரணி மாநில துணை செயலாளர் தமிழரசன் உள்பட மாணவரணி மாவட்ட அமைப்பாளர்கள், ஒன்றிய மற்றும் பகுதி அமைப்பாளர்கள் என பலரும் உடன் இருந்தனர்.

## பெரம்பூர் தொகுதியில்

# விஜய் வெற்றியை எதிர்த்து வழக்கு!

### கழக வேட்பாளர் ஆர்.டி.சேகர் தொடர்ந்தார்!



சென்னை, ஜூன் 22 -

பெரம்பூர் தொகுதியில் முதல்வர் விஜய் வெற்றியை எதிர்த்து கழக வேட்பாளர் ஆர்.டி.சேகர் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

பெரம்பூர் தொகுதியில் த.வெ.க. தலைவர் விஜய், தி.மு.க. வேட்பாளர் ஆர்.டி.சேகர் உள்ளிட்ட பல்வேறு கட்சி வேட்பாளர்கள் போட்டியிட்டனர்.

இத்தொகுதியில் முதல்வர் விஜய் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. இந்த தொகுதியில் பல்வேறு முறைகேடுகள் நடைபெற்றுள்ளதாக கூறி, முதல்வர் விஜயின் வெற்றியை எதிர்த்து கழக வேட்பாளர் ஆர்.டி.சேகர், வாக்காளர்கள் தினேஷ், லட்சுமி நரசிம்மன் ஆகியோர் வழக்கு தொடர்ந்துள்ளனர்.

## திருச்சி கிழக்கு தொகுதி

# அ.தி.மு.க.விலிருந்து விலகி 100க்கும் மேற்பட்டோர் தி.மு.க.வில் இணைந்தனர்!

### மாவட்டச் செயலாளர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி முன்னிலையில்!

திருச்சி, ஜூன் 22 -

திருச்சி கிழக்கு தொகுதிக்கு உட்பட்ட அ.தி.மு.க நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் அக்கட்சியிலிருந்து விலகி, மாவட்டக் கழகச் செயலாளர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி முன்னிலையில் தங்களை கழகத்தில் இணைத்துக் கொண்டனர்.



திருச்சி கிழக்கு தொகுதி, 17வது வட்ட அ.தி.மு.க வட்டச் செயலாளர் சிங்கமுத்து தலைமையில், நூற்றுக்கும் மேற்பட்ட அ.தி.மு.கவினர் அக்கட்சியிலிருந்து விலக முடிவு செய்தனர். அதன்படி, அவர்கள் அனைவரும் திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க சார்பில் தங்களை அதிகாரப்பூர்வமாக தி.மு.க.வில் இணைத்துக் கொண்டனர்.

மாற்றுக்கட்சியிலிருந்து விலகி தி.மு.க.வில் இணைந்தவர்களை, திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க சார்பில் பொன்னாடை அணிவித்து முறைப்படி வரவேற்றனர்.

இந்த விழாவின் போது பின்வரும் தி.மு.க முக்கிய நிர்வாகிகள் மற்றும் கழகப் பொறுப்பாளர்கள் உடனிருந்தனர்:

மாநகரக் கழகச் செயலாளர் மு. மதிவாணன் பகுதிக் கழகச் செயலாளர்பாபு வட்டக் கழகச் செயலாளர்கள் மனோகர் சுப்பிரமணி மேலும் இந்நிகழ்வில் ஏராளமான தி.மு.க கழக நிர்வாகிகளும், தொண்டர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## திரு.வி.க. நகர் புல்லட் கி.ரமேஷ் இல்ல மணவிழா வரவேற்பு!

சென்னை, ஜூன் 22 –

சென்னை கிழக்கு மாவட்டம், திரு. வி.க. நகர் வடக்கு பகுதி துணைச் செயலாளர் புல்லட் கி.ரமேஷ் மகன் ஆர்.ரஞ்சித் – டி. கீர்த்திகா ஆகியோரின் திருமண வரவேற்பு சென்னை அண்ணா திருமண மாளிகையில் நடைபெற்ற விழாவில் சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் பி.கே. சேகர் பாபு எம்.எல்.ஏ. தன்னுடைய மனைவியுடன் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்.

இம்மணவிழாவில் மேயர் பிரியா ராஜன், ப.தாயகம் கவி, பகுதி செயலாளர்கள் செ.தமிழ் வேந்தன், எம். சாமி கண்ணு, சரிதா மகேஷ் குமார், புனிதவதி எத்திராஜன், மற்றும் கழக உடன் பிறப்புகள் முன்னோடிகள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

# குடிநீர் கேட்டு த.வெ.க. அமைச்சரை பெண்கள் முற்றுகை!

### ‘பார்ப்போம்’ எனக்கூறி நழுவல்!

திருப்பரங்குன்றம், ஜூன் 22 -

மதுரை, திருப்பரங் குன்றம் வடக்கு ரத வீதியில் முதல்வர் விஜய் பிறந்த நாளை முன்னிட்டு, நேற்று ரத்ததான முகாம் நடைபெற்றது. இதில் பங்கேற்ற அமைச்சர் நிர்மல்குமார், நிகழ்ச்சியை முடித்துவிட்டு வெளியே வந்தார். அப்போது அங்கு நின்றிருந்த பெண்கள், திடீரென அமைச்சரை முற்றுகையிட்டு, “எங்கள் பகுதியில் குடிநீர் சரிவர வருவதில்லை. முறையாக குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்” என்றனர். அதற்கு அமைச்சர், ‘பார்ப்போம்’ என்று கூறி கிளம்பிச் சென்றார். அப்போது உடனிருந்த மாவட்டச் செயலாளர், பெண்களை சமாதானம் செய்தார்.

மேலும் அங்கிருந்த தவெக தொண்டர் ஒருவர், ‘சத்தம் போடாமல் மெதுவாக கேளுங்கள்’ என பெண்களிடம் கூறினார். அதற்கு பெண்கள், “குறைகளை கூற வந்த எங்களை அமைச்சர் கண்டுகொள்ளவேயில்லை.

குடிநீர் சரியாக வராததால் விலை கொடுத்து தண்ணீர் வாங்குகிறோம். சாலை முழுவதும் குண்டும், குழியுமாக உள்ளது. இறந்தவர்களை கூட தூக்கி செல்ல கடும் சிரமமாக உள்ளது.

எங்கள் பிரச்னைகளை எங்கு சென்று யாரிடம் சொல்வது என தெரியவில்லை. அமைச்சரிடம் கூறினால் ‘பார்ப்போம்’ என கூறிவிட்டு செல்கிறார்” என ஆதங்கத்துடன் தெரிவித்தனர்.



முத்தமிழறிஞர் கலைஞரின் 103வது பிறந்தநாளை முன்னிட்டு திருப்பூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. மற்றும் மாவட்ட மாணவர் அணி சார்பில் மாவட்டச் செயலாளர், இல.பத்மநாபன் தலைமையில் மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் தாராபுரம் குகன் வரவேற்புரையில் ஜி.சிவராஜ், எஸ். சோபனா பி.அருண்மொழி, எஸ். மேகநாதன், எஸ்.சிலம்பரசன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற கருத்தரங்கில் முன்னாள் அமைச்சர் மு.பெ.சாமிநாதன், திருப்பூர் மகிழவன், முன்னாள் அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ், மாநில மாணவர் அணி செயலாளர் ஈரோடு ஜெ.வீரமணி, மாநில இளைஞர் அணி துணை செயலாளர், ஈரோடு பாராளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் ஆகியோர் கருத்துரையாற்றினர்.



ஆலந்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 156வது வட்டம் அ.தி.மு.க.வை சேர்ந்த ஆர்.கிருஷ்ணன் வி.செல்வராஜ், எஸ்.லட்சுமி ஆகியோர் முன்னாள் அமைச்சர், காஞ்சி வடக்கு மாவட்ட கழக செயலாளர் தா.மோ.அன்பரசன் முன்னிலையில் தி.மு.கழகத்தில் இணைந்தனர். மாமன்ற உறுப்பினர் ஜெ.செல்வேந்திரன் மற்றும் கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.